சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.அ.பாலுமுத்து. எம்.எஸ்ஸி.,எம்.எட்.,

ப.மு.எண்.1201/அ1/2024 நாள்- 26.03.2024

---

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக்கல்வித்துறை - இளநிலை உதவியாளர் நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம் மூலம் 24/07/2022இல் நடைபெற்ற தொகுதி -IV தேர்வில் தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக்கல்வி (ப.க1) துறை நாள் 09/09/2022.
2. சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சுற்றறிக்கை எண்.453/PSD-B1/2022 நாள்: 26-07-2023.
3. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.56703/அ4/இ1/2023 நாள் 21/09/2023.
4. சிவகங்கை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.07115/அ1/2023 நாள் 27/09/2023.
5. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.122/அ1/2024 நாள் 08/01/2024.
6. காளையார்கோவில் வட்டாரக்கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.286/அ1/2024 நாள் 28/02/2024.

********

**ஆணை:**

24/07/2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், இளநிலை உதவியாளர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)-இல் காணும் செயல்முறை மூலம் பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (4)-இல் காணும் செயல்முறை ஆணைப்படி நியமன ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளருக்கு பார்வை (5)-இன் வாயிலாக பணிவரன்முறை செய்யவேண்டி கருத்துரு பரிந்துரையுடன் பெறப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று பார்வை (5)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி உண்மைத்தன்மை வாய்ந்தது என சான்றளிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், சம்மந்தப்பட்ட அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையிலும், கீழ்க்காணும் இளநிலை உதவியாளருக்கு அவரது பெயருக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை

உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணி நிபந்தனைச் சட்டம் 2016-ன் கீழ் உட்பிரிவு 28-ன்படி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் (திரு / திருமதி) | பதவி | பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவயாளர் பணியிடத்தில் பணிவரன்முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | நா.ராஜேஸ்குமார், | இளநிலை உதவியாளர் | வட்டாரக்கல்வி அலுவலகம், காளையார்கோவில், சிவகங்கை மாவட்டம் | 29/09/2023 மு.ப |

மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தர எண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணியின் பொதுவிதி 23-ன்படி மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண்பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் மற்றும் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சி (பவானிசாகர்) தேர்வுகளில் தேர்சி பெற வேண்டும்.

இந்த பணிவரன்முறைபடுத்தப்பட்ட ஆணை பார்வை (2)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர் / அலுவலர்கள் இந்த செயல்முறை ஆணையை மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

27/3/24

முதன்மைக்கல்வி அலுவலர்

சிவகங்கை

27/3/24

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)
2. சம்மந்தப்பட்ட வட்டாரக்கல்வி அலுவலர்.